www.Padasalai.Net www.CBSEtips.in

# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி

## காலாண்டுத் தேர்வு 2022 – 2023

வகுப்பு : 10 மாதிரித்தேர்வு - 2 நேரம் : 3.00 மணி

பாடம் : தமிழ் பகுதி – I மதிப்பெண்கள் : 100

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**II. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15x1=15**

1. 'காய்ந்த இலையும், காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது ..........
   அ. இலையும் சருகும் ஆ. தோகையும் சண்டும்
   இ. தாளும் ஓலையும் ஈ. சருகும் சண்டும்
2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.
   அ. கொண்டல் – 1 மேற்கு ஆ. கோடை – 2 தெற்கு
   இ. வாடை – 3 கிழக்கு ஈ. தென்றல் – 4 வடக்கு
   அ. 1,2,3,4 ஆ. 3,1,4,2 இ. 4,3,2,1 ஈ. 3,4,1,2
3. காசிக்கண்டம் என்பது ................
   அ. காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்.
   ஆ. காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்.
   இ. காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்.
   ஈ. காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்.
4. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ. வானத்தையும் பாட்டையும் ஆ. வானத்தையும், புகழையும்
   இ. வானத்தையும், பூமியையும் ஈ. வானத்தையும் பேரொலியையும்
5. பாரத ஸ்டேட் உரையாடும் மென்பொருள் எது?
   அ. துலா ஆ. சீலா இ. குலா ஈ. இலா
6. மலர்கள் தரையில் நழுவும் எப்போது?
   அ. அள்ளி முகர்ந்தால் ஆ. தளரப் பிணைத்தால்
   இ. இறுக்கி முடிச்சிட்டால் ஈ. காம்பு முறிந்தால்
7. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர் ...........
   அ. தமிழழகனார் ஆ. இளங்குமரனார்
   இ. சச்சீதானந்தன் ஈ. பாவாணர்
8. ஹிப்பாலஸ் பருவக் காற்றைக் கண்டுபிடித்தவர் ..........
   அ. ஹிப்பாலஸ் ஆ. கரிகால் பெருவளவன்
   இ. பரணர் ஈ. ஆர்தர் காட்டன்
9. அதோ அந்தப் பறவை போல நூலின் ஆசிரியர் .............
   அ. பாரதியார் ஆ. பாரதிதாசன்
   இ. ச.முகமது அலி ஈ. வ.உ. சிதம்பரனார்
10. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
    அ. கூவிளம் தேமா மலர் ஆ. கூவிளம் புளிமா நாள்
    இ. தேமா புளிமா காசு ஈ. புளிமா தேமா பிறப்பு
11. ஐன்ஸ்டைனின் பிறந்த நாளில் இறந்தவர், கலீலியோவின் நினைவு நாளில் பிறந்தவர் ...............
    அ. ஸ்டீபன் ஹாக்கிங் ஆ. ஐன்ஸ்டைன்
    இ. கலீலியோ ஈ. ஜான் வீலர்

**பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

கழிந்த பெரும் கேள்வியினான் எனக்
        கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான்
        இடைக்காட்டுப் புலவன் தென் சொல்
மொழிந்த அரசன் தனைக் காண்டும் எனத்
        தொடுத்த பனுவலொடு மூரித் தீம் தேன்
வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு தொடுத்து
        உரைப்பனுவல் வாசித்தான் ஆல்

12. இப்பாடலை இயற்றியவர் ................
    அ. சேக்கிழார் ஆ. இடைக்காடனார்
    இ. கபிலர் ஈ. பரஞ்சோதி முனிவர்

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ........
அ. பெரியபுராணம் ஆ. கம்பராமாயணம்
இ. நீதிவெண்பா ஈ. திருவிளையாடற் புராணம்
14. கேண்மையினான் பொருள் ........
அ. நட்பினன் ஆ. பகைவன் இ. உடன்பிறப்பு ஈ. தம்பி
15. அடி எதுகையைத் தேர்ந்தெடுக்க.
அ. கழிந்த கேள்வியினார் ஆ. பொழிந்த பெரும்
இ. வழிந்து ஒழுகு ஈ. கழிந்த பொழிந்த

**பகுதி – II (மதிப்பெண்கள் 18)**

பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க 4x2=8**
**(21 –ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)**

**16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.**
அ. 'சதம்' என்றால் நூறு என்று பொருள்.
ஆ, ஒரு நாளின் ஆறு கூறுகளைச் சிறுபொழுது என்று பிரித்துள்ளனர்.

17. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியாமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
18. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
19. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.
20. சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள் - இக்கவிதை உணர்த்தும் உள்ளழகை எழுதுக.
21. கண் என முடியும் குறளை அடிமாறாமல் எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x2=10**

22. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
23. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின்
வடுக்காண் வற்றாகும் கீழ்" - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக
24. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக.
**தொடரில் அமைக்க.**
25. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க.
அ. பசுமையான ............ ஐக் ............ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ. பொதுவாழ்வில் ........... கூடாது ............ இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)
26. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.
அ. வாழ்க்கையில் ......... மீண்டும் வெல்லும் இதைத் தத்துவமாய்த் .......... கூத்து சொல்லும்.
ஆ. மலை முகட்டில் மேகம் ............. ஆதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் .........
(தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பாவை, கவிழும், விருந்து)
27. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.
அ. எறும்புந்தன் கையால் எண்சாண்.
ஆ. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.
28. கலைச்சொற்களைத் தமிழாக்கம் செய்தல்.
அ. Whirlwind ஆ. Infrared rays

**பகுதி – III (மதிப்பெண்கள் 18)**

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்.
பூ உண்டு, ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் ; ஆல மலர் ; பலா மலர்.

**எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635**

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள்; சுள்ளி மலர், பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள்; அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன: நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

- கோவை. இளஞ்சேரன்

அ. அரும்பாகி ஏமாட்டாகிப் பூவாகி …….. என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.
ஆ. அரிய மலர் - இலக்கணக் குறிப்பு தருக.
இ. மலர் உண்டு, பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.

30. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
31. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென் பொருள். மனிதனைப்போலவே பேச, எழுத, சிந்திக்க, இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக் 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2x3=6**

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
34. அடிமாறாமல் எழுதுக.

அ. அன்னை மொழியே எனத் தொடங்கும் பாடல்.

(அல்லது)

ஆ. வாளால் அறுத்து எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல்.

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **2x3=6**

35. வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலோடு நின்றான் இரவு. - இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.
36. **அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது** இவை அனைத்தும் யாம் அறிவோம் அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை எல்லாம் எமக்குத் தெரியும் - இக்கூற்றில் (வண்ண எழுத்துக்களில்) உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.
37. சுரம்பிடும்பை இல்லாரைக் காணின் நிரம்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும் - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் 25)

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **5x5=25**

38. அ. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ. "பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" – குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதனைச் செயல்படுத்த தலைமை ஆசிரியரின் ஒப்புதல் வேண்டி, தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

42. அ. **நிற்க அதற்கு தக.**

அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர்க் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக் கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள் .... இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.

இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக.

| | |
|---|---|
| 1 | பிறந்த நாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன் |
| 2 | எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |

(அல்லது)

**ஆ. மொழிபெயர்க்க.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

## பகுதி – V (மதிப்பெண்கள் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** **3x8=24**

43. அ. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது அதற்கு பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அ. புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத்தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ. "கற்கை நன்றே கற்கை நன்றே" என்கிறது வெற்றி வேற்கை மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை வரைக.

முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவு – சாதனைகள் – முடிவுரை.

(அல்லது)

ஆ. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பு ஒன்று தருக.

குறிப்புகள் : முன்னுரை – மொழிபெயர்ப்பு நூல்கள் – எட்டுதிக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்து சேர்ப்பீர் – மொழிபெயர்ப்பும் கல்வியே – முடிவுரை.

**எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635**

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

**KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.**
மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி

## ____________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ________________________________

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண்          உறுப்பினர் எண் [        ]

1. பெயர் ____________________
2. தந்தை பெயர் ____________________
3. பிறந்த நாள் ____________________
4. வயது ____________________
5. படிப்பு ____________________
6. தொலைபேசி எண் ____________________
7. முகவரி ____________________
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ____________________

நான் ______________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ.________, சந்தா தொகை ரூ.________ ஆக மொத்தம் ரூ. ________ பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :
நாள் :          தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் ________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்
அலுவலக முத்திரை          (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஊராட்சி / பேரூராட்சி உறுப்பினர்கள்)

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593